
ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 4
இதழ் : 7

மே 2008



"நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்" (சங் 112:6)

**இயேசுவின் இருதயத்திற்கு ஏற்றவர்!**

**சகோதரர். D.G.S. தினகரன்**

(கோடிக்கணக்கான மக்களுக்காக பிரார்த்தனை செய்த
அன்பின் அப்போஸ்தலன்) (01.07.1935 – 20.02.2008)

**அவர்களுக்காக இந்த இதழை சமர்ப்பிக்கிறோம்.**

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்




இந்த ஊழியரின் பெயர் ரமேஷ் டின்டோடு. இவர் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ள சிமந்கேடா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இவர் இயேசுவைப் பற்றி அறியாத குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய கிராம மக்கள் மந்திரவாதிகளை நம்பி வாழ்பவர்கள். அதைப் போன்று இவர்களும் மந்திரவாதிகளை தெய்வமாக நினைத்து வாழ்ந்து வந்தார்கள். இவர் எல்லாவிதமான பாவங்களுக்கும் அடிமைப்பட்டு உலகப்பிரகாரமாக வாழ்ந்து வந்தார்.

இவருடைய குடும்பத்தில் எந்தவிதமான சமாதானமும் இல்லை. தினமும் வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் வேதனைப்பட்டார்கள். பிசாசின் போராட்டம் இவர்கள் குடும்பத்தில் அதிகரித்து வந்தது. மந்திரவாதியை நம்பிச் சென்று ஆடு, கோழி, சாராயம், தேங்காய் ஆகியவற்றை கொடுத்தும் பூஜை செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. மருத்துவமனைக்குச் சென்று ஆயிரமாயிரம் ரூபாய் செலவு செய்தும் சுகம் கிடைக்கவில்லை. கடைசியாக இந்த மரண வேதனையிருந்து **யார் விடுதலை கொடுக்க முடியும்?** என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் ஷாலோம் சுதேச ஊழியரை சந்தித்தார். இவருடைய துக்கத்தைக் கூறினார். அவர் இயேசுவின் அன்பையும் கூறி **இயேசு உங்களுக்கு சமாதானம் தருவார்** என்று கூறி ஜெபித்தார். பாவத்திருந்தும் சாபத்திருந்தும் அற்புத விடுதலை கிடைத்தது. தொடர்ந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தார்.

பின்பு இவருடைய வாழ்க்கையை இயேசுவிற்கு ஊழியம் செய்யவேண்டும் என்று அர்ப்பணித்தார். இவருடைய கிராமத்தில் இயேசுவை அறியாமல் இருளிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்காக பாரத்தோடு ஜெபித்து ஊழியம் செய்து வருகிறார். தொடர்ந்து இவருக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இவரை தாங்குபவர்: **Rev. D. Mohan, New Life A.G. Church** - Chennai.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள். தேவகிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் கடந்த மாதம் முழுவதும் தேவன் ஊழியங்களை நடத்தி வந்தார்.

குறிப்பாக ஏப்ரல் 7–12 வரை தெரிந்தெடுக்கப்பட்ட 70 சுதேச ஊழியர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமை ஆனந்த் பட்டிணத்தில் நடத்த தேவன் கிருபை தந்தார். கோவையி–ருந்து **போதகர். ஜோயல் ஆனந்தராஜ்** அவர்களும் 5 நாட்கள் வந்து பயிற்சி அளித்தார். அவர்களுடன் சென்னையி–ருந்து **போதகர். ஞானசேகரன்** அவர்களும் சபை வளர்ச்சிக்கான காரியங்களை எடுத்து பயிற்சி கொடுத்தார்கள். மதுரையி–ருந்து **போதகர். டட்– தங்கையா (New Life Assemblies)** அவர்கள் போதகர்களுக்கான சிறப்பு அபிஷேக கூட்டத்தை நடத்தி தந்தார்கள்.

குறிப்பாக இறுதி நாள் 12.04.08 சனிக்கிழமை அன்று **Dr. பால் தினகரன் (இயேசு அழைக்கிறார்)** அவர்கள் *அகமதாபாத்தில்* ஊழியர்களை வரவழைத்து சிறப்பு செய்தியளித்து அனைவரையும் புது அபிஷேகத்திலும், ஆசீர்வாதத்திலும் நிரம்ப வைத்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. மேலும் இம்முகாமிற்கான முழு செலவு பொறுப்பினை **இயேசு அழைக்கிறார் மூலமாக Dr. பால் தினகரன்** அவர்கள் எடுத்து உதவி செய்தார்கள். அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

மே மாதத்தில் 10 நாட்கள் நம் ஷாலோம் சபைகள் 425 இடங்களில் 20,000 ஆதிவாசி விசுவாசிகளின் பிள்ளைகள் கர்த்தருடைய வார்த்தையை அறிந்து வளரும்படியாக Children Bible Class (CBC) நடத்துவதற்கு புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளது. அதற்கான Director, Teacher Training முடித்து மே மாதம் 5–14 வரை நடத்தப்பட உள்ள CBC ஊழியத்திற்காக பாரத்துடன் அனைவரும் ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். **மேலும் இதற்கான தேவை**

*தொடர்ச்சி கடைசி பக்கம் பார்க்க....*

# நீதிமான் மேல் வரும் ஆசீர்வாதங்கள்

**சிறப்பு செய்தி: சகோ. தேவதாஸ்**

இந்த உலகத்தில் பாவங்கள் நிறைந்து, தேவனை மறந்து துன்மார்க்கமாய் அநேகர் ஜீவித்தாலும் உலகம் சிருஷ்டித்தது முதல் தேவன் தமக்காக நீதிமான்களை தெரிந்துகொள்ளுகிறார். பழைய ஏற்பாட்டில் அநேக நீதிமான்களை குறித்து வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டிலும் அநேக கொர்நெ—யுஸ் போன்ற நீதிமான்கள் இருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவப்பட்ட நீதிமான்களாகும்படி தெரிந்தெடுக்கப்பட்ட தேவ பிள்ளைகளாய் நாம் வாழ்கிறோம். அதேவேளையில் நாமும் நீதிமான்களாய் வாழும்படியாக தேவ ராஜ்ஜியத்தின் நீதியை நிறைவேற்றுகிறவர்களாய் அழைக்கப்பட்டும் இருக்கிறோம். நீதிமானுக்கு தேவன் துணை நிற்கிறார். ஆலோசனை தந்து வழிநடத்துகிறார். ஆசீர்வதிக்கிறார். வேதத்தில் நீதிமானை குறித்து தியானித்தால் எவ்வளவோ உண்டு. சில காரியங்களை மட்டும் தியானிப்போம்.

## 1. நீதிமானை ஆசீர்வதிக்கும் கர்த்தர்

கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னும் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர். (சங் 5 : 2) நீதிமானாக விளங்கும்போது தேவன் அவன்மேல் பிரியமாயிருக்கிறார். அவனுக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தையும், இவ்வுலக ஆசீர்வாதங்களையும் கூட்டித் தருகிறார். ஆதி. 6 : 9 வாசித்துப்பாருங்கள். ***"நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாய் இருந்தான்"*** நோவாவின் காலத்தில் பாவங்கள் நிரம்பியிருந்தது. உற்றார் உறவினர்,நண்பர், சமுதாயம் முழுவதும் பாவத்தில் வாழ்ந்தார்கள். மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு (ஆதி 5 : 5) சொல்லுகிறது.

ஆனால் நோவாவோ நீதிமானாக தன் காலத்தில் இருந்தவர்களுக்குள் பாவத்தை வெறுத்து, நீதிமானாக, உத்தமனாக வாழ்ந்தான். எனக்கு அன்பானவர்களே இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கப்பட்டவர்களாக அல்ல நோவாவைப்போல் பாவத்திற்கு அடிபணிந்து போகாமல் நான் தேவனுக்காக நீதிமானாக வாழ தேவன் விரும்புகிறார். மனுஷகுமாரன் இயேசு வரும்போது நோவாவின் காலத்தினைப்போல் ஜனங்கள் புசித்தும், குடித்தும், வெறித்தும் வாழ்வார்கள் என்று இயேசு கூறினார்.

நோவா நீதிமானாக வாழ்ந்தபடியால் முதலாவது தேவன் உண்டுபண்ணின பேழைக்குள்

பாதுகாக்கப்பட்டார்கள். ***கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாக கண்டேன். ஆதி 7 :1***

இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாமும் இரட்சிப்பின் பேழைக்குள் அழைக்கப்பட்டுள்ளோம். நாம் நீதிமான்களாய் வாழும்போது தேவன் இரட்சிப்பின் சந்தோஷத்தை நமக்குத் தருகிறார். மட்டுமல்லாமல் இரண்டாவதாக தேவன் நோவாவை ஆசீர்வதித்தார். அவனுடன் உடன்படிக்கை செய்தார். ஆதி.9 :1 கர்த்தருக்கு பயந்து நீதிமான்களாய் வாழும்போது நம்மை ஆசீர்வதித்து, பலுகி பெருகப்பண்ணுகிறார். ***நீதிமானின் சிரசின் மேல் ஆசீர்வாதங்கள் தங்கும். (நீதி. 10 : 6)***

## உ. நீதிமானின் சந்ததிமேல் வரும் ஆசீர்வாதம்:

ஆபிரகாமை தேவன் தெரிந்துகொண்டு அவனை ஆசீர்வதித்தார். ஆபிரகாமின் ஊழியக்காரர் எ–யேசர் ஆபிரகாமைக் குறித்து சொல்லுகிறார். ***கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார். அவர் சீமானாய் இருக்கிறார். கர்த்தர் அவருக்கு ஆடு, மாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொடுத்திருக்கிறார். ஆதி. 24 : 35*** தேவன் உலக ஆசீர்வாதங்களை அவனுடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல. அவன் சந்ததிக்கும் தந்தருளினார். நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்கு கீழ்ப்படிந்தபடியினால் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும், என் பெயரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (ஆதி 22 : 17, 18)

ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித்திரிந்து சீகேம் என்னும் இடத்துக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமி மட்டுக்கும் வந்தான்; அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள். ஆதி 12 : 6 ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அதையே தேவன் நீதியாக கருதினார். வசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் அல்லவா? ஆபிரகாம் இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைக்கிற, மரித்தோரை எழுப்ப வல்ல தேவனிடத்தில் விசுவாசித்தான். மட்டுமல்ல தேவனுக்கு கீழ்படிந்தான். வேதம் சொல்லுகிறது. நாமும் ஆபிரகாமின் சந்ததியாராக விசுவாச

மார்க்கத்தாராக அழைக்கப்பட்டுள்ளோம். ஆபிரகாமைப்போல் எந்த சூழ்நிலையிலும் நம்மை அழைத்தவரை விசுவாசித்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்படியும்போது நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். ஆபிரகாமைப் போல் உனக்குள் பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்ற வாக்கின்படி நம் மூலமாக அநேக ஊழியங்கள், ஊழியர்கள், அநேக ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமின் தேவன் ஈசாக்கை நூறுமடங்காக ஆசீர்வதித்தார். அப்படியே நம் சந்ததியையும் ஆசீர்வதிப்பார். கலா 3 : 14–ன்படி ஆபிரகாமின் ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஆவியைக் கொண்டு அருளப்பட்டபடியால் தேவனை துதிப்போம். தேவன்மேல் விசுவாசம் கொண்டு, அவருக்கு கீழ்ப்படிந்து நீதிமான்களின் சந்ததியாக அசீர்வாதங்களை பெறலாம்.

பிரியமானவர்களே நம் அன்பு தகப்பனும், தீர்க்கதரிசியுமான **Dr.D.G.S. தினகரன் ஐயா** அவர்களின் வாழ்க்கையை பாருங்கள். கர்த்தர் அவர்களை நீதிமானாக கண்டு அவர்களையும், குடும்பத்தையும், இரட்சிப்பின் சந்தோஷத்தையும், ஆவியின் வரங்களையும், பரலோகத்தின் ஆசீர்வாதங்களை பூலோக மாந்தர்க்கு அறிவிக்கும் பணிகளை தந்தருளினார். மட்டுமல்லாமல் அவர்களின் சந்ததியான **Dr. பால் தினகரன்** குடும்பத்தினரையும், பேரப்பிள்ளைகளான **சாம், ஷேரன், சுவீட்டி** ஆகியோரையும் வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். அவர்கள் சந்ததி முழுவதும் உலகம் அனைத்தும் உள்ள நாடுகள், ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக இயேசு அழைக்கிறார், காருண்யா பல்கலைகழக ஊழியங்களை தேவன் அபரிதமாக ஆசீர்வதித்துள்ளார்.

அதேபோல் அன்பு **Dr.D.G.S. தினகரன் ஐயா** அவர்கள் வாழ்க்கையில் கடந்து வந்த ஊழியப்பாதையில் இழப்புகள், நோயின் கொடுமை, பல வன்சொற்கள், இடுக்கண்கள், போராட்டங்கள் மத்தியில் தேவன் நீதிமானான **Dr.D.G.S. தினகரன் ஐயா** அவர்களுடன் இருந்தாரென்பது நாம் அறிந்த ஒன்றாகும். அவர்கள் கர்த்தரண்டை செல்லும் முன்பதாக Dr. பால் அவர்களிடம் **“இதோ கர்த்தருக்கு முன்பாக என் இதயமும், கரங்களும் சுத்தமாக உள்ளது. அவரை சந்திக்கப்போகிறேன்”** என்று சாட்சியாக கூறி சென்றுள்ளார்கள். இன்னும் அவர்களுடைய வார்த்தைகள், செய்திகள், முன்மாதிரியான வாழ்க்கை நமக்கு வழிகாட்டியாக பலரை உயிர்ப்பிக்கத்தக்கதாய் உள்ளது அல்லவா!

தேவன் தாமே நம்மையும் நீதிமான்களாக்கி, நித்திய கரைசேரும்வரை நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

**“கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்”.** [நீதி 18 : 10]



# ஊழியப்பாதையில் அன்பு தந்தை Dr.D.G.S.தினகரன் அவர்களுடன் நீங்காத நினைவுகள்...

## உடைந்த உள்ளங்களை ஆற்றித் தேற்றும் ஊழியம்

1992ஆம் ஆண்டு ஜனவரி இறுதி வாரத்தில் ஒருநாள் நானும், என் மனைவியும் ஊழியப்பாதையில் அன்பு மகளை இழந்து பாடுகள், கஷ்டங்கள் மத்தியில் (இருதயம் நொருங்குண்டு) எங்களை உண்மை உள்ளத்துடன் தேற்றுவார் யாராவது உலகில் உண்டோ என்று எண்ணியபடி சென்னையில் வந்திருந்த வேளையில் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் அலுவலகத்திற்கு முதன் முறையாக உள்ளே சென்றோம். அங்கிருந்த ஊழியரிடம் நாங்கள் குஜராத் மிஷனெரிகள் என்று கூறி தினகரன் ஐயாவைக் கண்டு ஜெபிக்க முடியுமா? என்றோம். அன்றைய தினம் பார்வையாளர் தினமாக **சகோ.பால் தினகரன்** ஒவ்வொருவருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். நாங்களும் முதல் முறை அவர்களை சந்தித்து சில நிமிடங்கள் எங்களைப்பற்றி, ஊழியங்களைப்பற்றி கூறினோம். எங்களுக்காக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டோம். கண்களில் கண்ணீருடன் சொந்த சகோதரனுக்கு வந்த இழப்பைப்போல உருக்கமாக ஜெபித்தது மட்டுமல்லாமல் ஜெபிக்கும் போது "Lord I am unworthy to pray for thy servant" என்று கூறின வார்த்தை என்னை உடைத்தது. அவரது மனதுருக்கமும் தாழ்மையுமான ஜெபம் மூலமாக தேவன் எங்களை பெலப்படுத்தினார். நான்கு நாட்களில் குஜராத் பணித்தளம் வந்தடைந்தோம். என்ன ஆச்சரியம்! ரூ. 500/– டிராப்ட் வெகுமதியுடன், அன்பின் கடிதம் மற்றும் ஊழியத்திற்கு பயன்படுத்த இலவசமாக 10 வீடியோ கேசட்டுகளும் அனுப்பி வைத்தார்கள். இதுதான் இயேசு அழைக்கிறார் ஊழியத்துடன் அறிமுகமான ஆரம்பம்.

## வல்லமை ஊழிய பயிற்சி

1992ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற்ற இயேசு அழைக்கிறார் வல்லமை ஊழிய பயிற்சி முகாமிற்கு இருவரும் விண்ணப்பம் செய்தோம். அதில் கேட்கப்பட்ட கேள்விகள் பலவற்றிற்கு இல்லை என பதில் எழுத வேண்டியிருந்தது. இயேசு அழைக்கிறார் பத்திரிக்கை, இளம் பங்காளர், காருண்யா, தொலைக்காட்சி போன்ற ஊழியத்தில் பல பிரிவுகளில் ஒன்றுமே நாங்கள் பங்கெடுத்தது கிடையாது. எனவே எங்களுக்கு இடம் கிடைக்காது

என நினைத்தோம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் ஏவுத–னால் அவர்கள் எங்கள் இருவரையும் தெரிந்தெடுத்து முகாமில் பங்கெடுக்கச் செய்தார்கள். அந்த முகாமில் ஆவியின் ஒன்பது வரங்களும், கனிகளும் பற்றிய ஆழமான சத்தியங்களையும் இயேசுவின் அன்பையும், மனதுருக்கத்தையும், பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் ஊழியங்கள் செய்வதையும் கற்றுக் கொண்டதுடன் விசேஷித்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டோம். அந்த நாள் முதல் சுகமாக்கும் வரங்கள் பெற்று ஊழியத்தில் அற்புத அடையாளங்கள் மூலமாக திரளான ஆத்துமாக்கள் வருவதைக் கண்டோம்.

எங்களை மட்டுமின்றி 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மத்தியபிரதேசத்தில் நடைபெற்ற வல்லமை பயிற்சி முகாம் 23ஆம் அணியில் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் மத்தியில் படிப்பறிவு குறைவான, ஞானம் குறைவான, எளிய ஊழியர்களாகிய நம்முடைய 40 பீல் சுதேச ஊழியர்களை (விண்ணப்பித்த அனைவரையும்) ஏற்றுக் கொண்டு பயிற்சி கொடுத்தார்கள். அந்த 40 பீல் சுதேச ஊழியர்கள் நட்சத்திரங்களைப் போல அடுத்த இருண்டு வருடங்களில் பெரிய எழுப்புதலை, பீல் மக்கள் மத்தியில் அற்புத அடையாளமான ஊழியங்கள் மூலமாக கொண்டு வந்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## ஊழியர்களை நேசிக்கும் தகப்பன்

கடந்த 16 ஆண்டுகளாக அவர்களே வருடந்தோறும் பிள்ளைகளுடன் குடும்பமாக ஒரு முறை அல்லது இரு முறை சந்திக்க வாய்ப்பளித்துள்ளார்கள். அநேக முறை ஊழியத்தைக் குறித்துப் பேசுவதை விட எங்கள் நலனைப்பற்றி, சுகத்தைப் பற்றி பேசுவார்கள். பிள்ளைகளைப் பற்றி அதிக அக்கறை கொண்டவர்கள். ஊழியர்களின் துக்கங்களை விசாரித்து ஏற்றுக் கொண்டு ஜெபித்து, ஆறுதல் தருவது அவர்களுக்கு தேவன் தந்த கிருபையாகும்.

எங்களது **ஷாரோன்** பெண் குழந்தை இறந்தவுடன் "இரண்டு ஆண் பிள்ளைகளுக்கு மேல் வேண்டாம் என தேவன் நினைத்தாரோ" என எங்களுக்குள் இருந்த குழந்தை ஆசை அகன்று விட்டது. ஆனால் அன்பு ஐயா அவர்கள் முதன் முறை எங்களுக்காக ஜெபித்தபோது "மறுபடியும் அந்தக் குழந்தையை கட்டாயம் தந்து ஊழியர்களை பரவசப்படுத்தும்" என்று சொன்னபோது அவர்கள் கண்களி–ருந்து கண்ணீர் எங்கள் மீது விழுந்தது. ஜெபத்தைக் கேட்ட தேவன் 10 மாதங்களில் **ஷெக்கினா** என்ற அழகான

பெண் குழந்தையை தந்து ஆறுதலையும் சந்தோஷத்தையும் தந்தார்.

எந்த நேரத்தில் தொலைபேசியில் அவர்களோடு பேசும்போது பிள்ளைகளை அன்புடன் விசாரிப்பதும், பிள்ளைகளை நேரில் காணும்போது தன் பேரப்பிள்ளைகளைப் போல முத்தமிட்டு அன்பு பாராட்டுவதும் என்னவென்று சொல்வேன்! "தம்பி, நன்கு சாப்பிடவேண்டும், தேவையானபோது ஓய்வு எடுக்க வேண்டும், என்னைப்போல உடம்பைக் கெடுத்துவிடாதே" என தனிப்பட்ட ஆலோசனைகளைக் கூறுவார்கள். எனக்காக, குடும்பத்திற்காக தரும் காணிக்கைகளை மனைவிக்குத் தெரிவிக்காமல் ஊழியத்திற்கே கொடுத்துவிடுவேன். ஒருமுறை அவர்கள் ஜெபிக்கும்போது தீர்க்கதரிசனத்தில் "மகனே ஊழியத்திற்கு கொடுப்பது ஊழியத்திற்கு, உனக்கு என நான் கொடுப்பதை உனக்காக கொடுப்பதை ஏன் ஊழியத்தில் போடுகிறாய்? நான் ஊழியர்களின் சுகத்தையும் நலனையும் விரும்பும் கர்த்தர்" என கூறினார்கள். எனக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவ உலகில் புண்பட்ட அநேக தேவ ஊழியர்களை ஆவியானவரின் ஏவுதலின்படி தேற்றுவதற்காக, தேவன் கொடுத்த **ஆவிக்குரிய தகப்பன் தினகரன் ஐயா** அவர்கள்தான்.

1999ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஊழியப்பாதையில் பணநெருக்கத்தின் மத்தியில் உடைக்கப்பட்டவனாய், மாடியில் சென்று கண்ணீருடன் "ஆண்டவரே கடந்த 8 வருடங்கள் இந்த ஊழியத்தை உண்மையாகவும், எனக்காக, குடும்பத்திற்காக, பிள்ளைகளுக்காக ஒன்றும்கூட இச்சிக்காமல் ஊழியம் செய்தேனே, பின்னும் ஏன் இந்த நெருக்கம்" என ஜெபித்தேன். தேவன் ஆறுதல் தந்தார். அடுத்தநாள் காலை வந்த தபாலில் தினகரன் ஐயா கடிதம் வந்தது. அதில் **"நானும் என் மகன் பால் தினகரனும் ஜெபித்து ஆவியானவரின் ஏவுதலின்படி இந்த காணிக்கையை உங்கள் சொந்த செலவிற்கென அனுப்பியுள்ளேன்"** என் எழுதி ரூ. 1 லட்சத்திற்கான டிராப்டை வைத்திருந்தார்கள். பலமுறை நாங்கள் சோர்வுற்றபொழுதெல்லாம் சொந்த பிள்ளைகளுக்கு உதவுவது போல எங்களுக்கு உதவும் தகப்பன் உள்ளம் கொண்டவர்கள் அவர்கள்.

## ஊழியப்பாதையில் தேவ ராஜ்ஜியத்தைக் கட்டுவதில் பங்கு

ஊழியப்பாதையில் எதிர்ப்புகள் வரும்போது சரியான ஆலோசனை வழங்கி ஜெபித்து தைரியம் கொடுப்பார்கள். ஒருமுறை திடீரென பேசிக்கொண்டிருக்கும்போது மத்தியபிரதேசம் போப்பாலில் உள்ள **Rev. அனில் மார்டீன்** என்ற போதகர் மிகவும் கண்ணியமான அரசியல் செல்வாக்கு பெற்றவர். அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி சிறப்பான கடிதமும் நான் கேட்காமலேயே தந்தார்கள். ஏன் என எனக்குப் புரியவில்லை.

ஆறு மாதங்கள் கழிந்தது. மத்தியபிரதேசம் ஜாபுவா மாவட்டத்தில் நாங்கள் பயங்கரமான எதிர்ப்புகளைச் சமாளிக்க முடியாத வேளையில் Rev. அனில் மார்டீன் மூலமாக முதலமைச்சர் மற்றும் D.G.P. அவர்களைச் சந்திக்கவும், மத்தியபிரதேசத்தில் மாநில அளவில் ஊழியர்களை M.P. State Christian Association உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். ஊழியங்கள் வளரும்போது ஆலோசனைகளையும் வழங்கி முன்னேற்ற காரியங்களையும் பகிர்ந்து கொள்வார்கள். எதிர்காலத் திட்டங்களைக் கேட்டு அறிவதிலும் ஊழியர்களின் தேவைகளை சந்திப்பதிலும் வாஞ்சை காட்டுவார்கள்.

## சிறிய வாடகை வீட்டி–ருந்து சொந்த பங்களா

பலமுறை ஊழியத்திற்கு தேவைகள் இருக்கும்போது "இயேசு அழைக்கிறார்" ஊழியத்தி–ருந்து ஆசீர்வாதமாக நிதி உதவிகள் வருவதுண்டு. குறிப்பாக நாங்கள் ஜாலோத்தில் ஊழியம் ஆரம்பித்த இரண்டாம் வருடத்தில் ஊழியங்கள் வளரவே திரு. சந்திரலால் மேர்வானி என்ற சிந்தி வியாபாரியுடைய பெரிய பங்களாவை ரூ. 2500/– மாத வாடகையில் மூன்று வருடங்களாக தங்கவும், ஊழியங்களை வளரச் செய்யவும் தேவன் கிருபை செய்தார். ஊருக்கு வெளியில் இருக்கும் இந்த பங்களாவில் கொள்ளையடிப்பவர்கள் அடிக்கடி வந்தபடியால் வீட்டுக்காரர் பழைய வீட்டிற்குச் சென்றுவிட்டார். திடீரென வீட்டை விற்பனை செய்யவேண்டும் என்ற நிலை வந்தபோது 6 இலட்சத்திற்கு நாங்கள் அதை வாங்க தீர்மானித்து ரூ. 4லட்சம் வரை கிடைத்த நிதி உதவியை அவர்களிடம் கொடுத்துவிட்டோம். காலதாமதமான போது வீட்டு உரிமையாளர் "இன்னும் மூன்று நாளில் மீதி 2இலட்சம் தரவில்லையெனில் வீட்டை கா– செய்ய வேண்டும்" என்று கடுமையாக கூறினார். கண்ணீருடன் "ஆண்டவரே இந்த காட்டு ஜனங்களுக்காக எங்களை அனுப்பினீர் இந்த இடத்தில் நீர் கொடாவிட்டால் யார் எங்களுக்குக் கொடுப்பார்கள்" என்று ஜெபித்தேன். அப்பொழுது தொலைபேசி மணி அடித்தது. சோர்வுடன் சென்று எடுத்து "ஹலோ" என கூறினேன். என்ன ஆச்சரியம்! மறுபுறத்தில் "யாரு தம்பி, தேவதாஸா?" என்று தினகரன் ஐயா அவர்கள் பேசினார்கள். ஊழியங்களைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் விசாரித்துவிட்டு அவர்களே "அந்தக் கட்டிடத்தை நீங்கள் வாங்கிவிட்டீர்களா?" என்று கேட்டார்கள் விவரங்களைக் கண்ணீருடன் கூறினேன். **2லட்சம் ரூபாயை நானே தருகிறேன்** என்று சொன்னார்கள். அதன்பின்பு, பதிவு செய்வதற்கும் அதிக பணம் தேவையே என்று சொன்னார்கள். நான் 2 லட்சம் ரூபாய் இருந்தால் போதும் சமாளித்து விடுவேன் என்று சொன்னேன்.

**காட்டிற்குள் இருந்து சமாளிகசும் பையனைப் பாரு** என்று சிரித்துக் கொண்டே **கவலைப்படாதே** என்று கூறி ஜெபித்து ஆசீர்வதித்தார்கள்.

அடுத்த நானே மீதி தேவையான பணத்தையும் மற்றும் பதிவு செய்வதற்கான பணத்தையும் சேர்த்து ரூ. 2,50,000/– க்கு டிராப்டை கொரியரில் அனுப்பி வைத்தார்கள். பெற்றுக் கொண்டதும் பணத்தைக் கொடுத்த விட்டை Sharing Love Mission என்ற பெயருக்கு பதிவு செய்யும்படி தேவன் கிருபை செய்தார். பணத்தைப் பெற்றுக் கொண்ட சிந்தி மனிதர் **மெய்யாகவே நீங்கள் வணங்கும் ஆண்டவர் ஜீவிக்கிறார் என்றும் உங்கள் ஆண்டவர் என்னை அழகான வீட்டைக் கட்ட வைத்து குறைவான விலையில் உங்களுக்குக் கொடுக்க வைத்துள்ளார்** என்றும் சாட்சி கூறினார்.

## தூத்துக்குடியில் எங்கள் குடும்பத்திற்காக தேவன் கொடுத்த வீடு

நாங்கள் எங்கள் பிள்ளைகளின் விடுமுறை நாட்களில் பணித்தளத்தி–ருந்து தமிழகம் வருவதுண்டு. ஆரம்பநாட்களில் ஆறுமுகநேரி, நாசரேத்–ல் என்னுடைய மாமியார் அவர்கள் வீட்டில்தான் தங்குவது வழக்கம். அதன்பின் தூத்துக்குடி அலுவலகத்திற்கு எதிரே உள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தோம். அப்பொழுது அதன் பக்கத்தில் உள்ள பழைய கட்டிடத்துடன் உள்ள ஒரு இடம் விலைக்கு வந்தது. வீட்டுக்காரரும், அருகில் உள்ள அனைவரும் நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அப்போது **D.G.S. தினகரன் ஐயா** அவர்களிடம் இதற்காக ஜெபிக்கும்படி கூறினோம். அவர்களும் ஜெபித்துவிட்டு **"கடந்த 26 ஆண்டுகள் தேவனுடைய ஊழியத்தை உண்மையும் உத்தமத்துடன் செய்த உங்களுக்கு கர்த்தர் இந்த வீட்டைத் தருகிறார், பெற்றுக் கொள்ளுங்கள்"** என்று கூறினார்கள். இந்த பழைய வீட்டிலேயே ஒரு சில அறைகளை கட்டி அதில் குடியிருக்கலாம் என நாங்கள் நினைத்தோம். ஆனால் **D.G.S. தினகரன் ஐயா "பழைய வீட்டை உடைத்துவிட்டு எல்லாமே புதிதாக கட்டி விடுங்கள் ஆண்டவர் தேவைகளை சந்திப்பார்"** என்று கூறினது மாத்திரமல்ல வீடு கட்டுவதற்கான செலவில் மிகப்பெரிய பங்கை கொடுத்து உதவி செய்தார்கள். எங்கள் குடும்பத்தை நேசித்த எங்கள் ஆவிக்குரிய தகப்பன் D.G.S. தினகரன் ஐயா அவர்கள் செய்த உதவியை எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது.

இவற்றை தேவ நாமம் மகிமைக்காக, சாட்சியாக எழுதுகிறேன். எங்கள் மீதும் பீல் ஆதிவாசி மக்கள் மீதும், ஊழியத்தின் மீதும் அளவு கடந்த அன்பு உள்ளடம் கொண்ட

Dr. D.G.S. தினகரன் ஐயா அம்மா, மற்றும் அன்பு சகோதரர் பால் தினகரன் அவர்கள் குடும்பத்திற்காகவும் இயேசு அழைக்கிறார் ஊழியர்கள் அனைவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். அத்தோடு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை அவர்களுக்குக் கூறிக்கொள்கிறோம். அவர்கள் மறைமுகமான செய்யும் பணிகள் எத்தனையோ உண்டு. அதன் பலனாக ஆசீர்வதிக்கப்பட்ட ஊழியர்களும் தேவபிள்ளைகளும் அநேகர் உண்டு.

"இயேசு அழைக்கிறார்" ஊழியங்களுக்காக எழும்பியுள்ள சுமார் 600 தன்னார்வ பிரதிநிதிகளில் ஒரு குடும்பமாக நாங்கள் எங்கள் பகுதியில் பணி செய்து முதல் முப்பது பிரதிநிதிகளில் ஒருவராக செயல்பட்டு வருவது எங்களுக்கு மகிழ்ச்சியும் தேவ ஆசீர்வாதமுமாகும். இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காகவும், Dr. தினகரன் ஐயா குடும்பத்திற்காகவும், சகோ. பால்தினகரன் குடும்பத்திற்காகவும் தேவனைத் துதிப்போம்.

## எங்களுக்குள் ஊற்றப்பட்ட கல்வாரி அன்பு

சிலுவையண்டையில் இருந்த இயசேுவின் தாயார் மரியாளையும், அன்பான சீஷரான யோவானையும் ஆண்டவர் இயேசு அன்பினால் இணைத்தது போல் எங்கள் குடும்பத்தை Dr. D.G.S. தினகரன் ஐயா அவர்கள் குடும்பத்துடன் இணைத்து வைத்தார் என்றுதான் சொல்வோம். 2007ம் ஆண்டு மே மாதம் காருண்யா இயேசு அழைக்கிறார் கூடுகையில் எங்கள் இருவரையும் மேடையில் அழைத்து Dr. பால் தினகரன் அவர்கள் **என் அன்புத் தந்தை Dr. D.G.S. தினகரன் அவர்களுக்கு "சொந்த பிள்ளைகள் மாதிரி" பிள்ளைகளேதான் இவர்கள்** என்று அறிமுகம் செய்த போது எங்கள் கண்களில் கண்ணீர் புரண்டு ஓடியது.

## தகப்பனை போல் உள்ளம்

நாங்கள் அப்பாவை தொந்தரவு செய்ய வேண்டாம் என நினைத்தாலும் அவர்களே மாதம் ஒரு முறையாவது குஜராத், தாகோத் தொலைபேசியில் தொடர்பு கொள்வார்கள். அடிக்கடி தம்பி உபவாச நாட்கள் தவிர மற்ற நாட்களில் ஒழுங்காக சாப்பிடு, நன்றாக ஓய்வெடு, இரவு பிரயாணங்கள் ஜீப்பில் போகவேண்டாம் பிள்ளைகளின் பெயரைச் சொல்– டைட்டஸ், ஷாலோம் குட்டிநாய் என்று செல்லமாக ஷெக்கினாவை கேட்டு விசாரிப்பார்கள். ஒவ்வொரு வருடமும் பிள்ளைகள் மேற்படிப்பு வரவர கேட்காமலே கல்விக்காக மிகுந்த உதவிகள் செய்வார்கள்.

அன்பு மகள் ஷெக்கினா பெரியவளாகிய போது நேரில் வருகை தந்து அவளை

ஜெபித்து ஆசீர்வதித்து உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்கள். "தாத்தா எனக்கு தங்க வளையல்தான் வேண்டும்" என ஜெபிக்கிறேன் என்று ஷெக்கினா பதில் கூற ரூ. 25,000/– அவளிடம் கொடுத்து 4 வளையல்கள் வாங்கி இன்றே போட்டுக் கொள் என்று கூறி ஆசீர்வதித்தார்கள். மூத்த மகன் டைட்டஸ் Lyola College ல் B.B.A., விண்ணபித்தபோது தினமும் விசாரிப்பார்கள் இடம் கிடைத்ததா? ஹாஸ்ட–ல் இடம் கிடைத்ததா? என்று கரிசனத்துடன் விசாரிப்பார்கள். ஷாலோம் Karunya –ல் படிப்பதற்கு இடமும், நிதி உதவியும் செய்து அவனையும் ஆசீர்வதித்தார்கள்.

ஒரு முறை நான் மோட்டார் சைகக்கிளில் இருந்து விழுந்து கால் பலவீமாகிவிட்டது. கோவை KMCH ஆஸ்பத்திரியில் 2நாட்கள் கழித்து ஆப்ரேஷனுக்கு நாள் குறித்துவிட்டார்கள். காருண்யாவிற்கு ஐயா வந்தபோது அவர்களை கண்டு ஜெபித்தேன். அவர்களின் கண்களி–ருந்து கண்ணீர் என் கா–ல் பட்டது. அவர்கள் கரங்களை என் கா–ல் வைத்து ஜெபித்தார்கள். ஜெபித்து முடித்து வெளியில் வந்த போது "சடக்" என்ற சத்தம் கா–ல் கேட்டது அவ்வளவுதான் ஆப்ரேஷன் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிற்று. இன்று வரை தேவன் பெலன் தந்துள்ளார்.

கோத்ராவில் ரயில் பெட்டி எரிப்பு, கலவரம் குறிப்பாக குஜராத்தில் பூகம்பம் வந்த நாட்களில் அடிக்கடி கூப்பிட்டு கரிசனையாக விசாரிப்பார்கள். அன்பு ஐயா அவர்கள் மரித்த அன்று வந்த போது சகோ. பாண்டியன் அவர்கள் *"என் கரங்களை பிடித்து கூறினார்கள் தம்பி தேவதாஸ், வஹிதா எப்படியிருக்கிறீர்கள். மரிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு குஜராத் தொலைபேசி தொடர்பு வேலைசெய்யாத காரணத்தினால் உங்களோடு பேச முடியாமல் துடிதுடித்து போனார்கள். பின் 3வது நாள் உங்கள் போன் வந்த போது தான் அப்பாடா என்று சந்தோஷமடைந்தார்கள்"* என்று கூறினார்கள்.

## ஊழியப்பாதையில் நெருக்கப்படும் போதெல்லாம்

நாங்கள் 16 வருடங்கள் கடந்து வந்த பாதைகளை நினைக்கும் போது எத்தனையோ எதிர்ப்புகள், கலவரங்கள் மத்தியில் தினகரன் ஐயாவிடம் தான் தொடர்பு கொள்வோம். உடனடியாக தொடர்பு கொள்வார்கள். சில நேரங்களில் கிடைக்கவில்லையெனில் இரவு 10 மணிக்கு மேல் கூட அவர்களே கூப்பிட்டு விசாரிப்பார்கள். எப்படிப்பட்ட பிரச்சனைகள், எதிர்ப்புகளாக இருந்தாலும் அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்–விட்டால் போதும் அதன்பின் சமாதானமாகிவிடும். அதுமட்டுமன்றி ஆலோசனைகளையும் தருவார்கள்.

எங்களுக்கு மட்டுமல்ல நூற்றுக்கணக்கான போதகர்கள், பிள்ளைகள் திருமணம், படிப்பு மருத்துவ உதவி என்றும் அநேக ஆலயங்களுக்கு கூரை அமைக்க இலட்சங்களை அள்ளித் தந்தார் அன்பு உள்ளம் கொண்ட தினகரன் ஐயா அவர்கள். ஐயா அவர்களின் இறுதி ஆராதனையில் நாங்கள் கலந்து கொண்ட போது எத்தனையோ ஊழியர்கள் பெற்ற நன்மைளை, ஆறுதல்களை, ஆலோசனைகளை பெற்றவர்கள் கதறினார்கள். இஸ்ரவேலுக்கு அக்கினியும் இரதமுமாயிருந்தவர் இந்த தேசத்தில் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, வட இந்தியாவிலும் ஆசீர்வதிக்கப்பட்ட ஊழியர்கள்தான் எத்தனை!

மிஷனெரி பணியில் நாங்கள் சபைகளை என்ன செய்ய வேண்டும்? பிரச்சனைகளில் என்ன ஆலோசனைகளை கேட்கிற போதெல்லாம் வெறுமென ஜெபிக்காமல் உபவாசித்து தேவசித்தத்தை சொல்லுவார்கள், அல்லது கடிதம் எழுதுவார்கள். எங்களைப் போன்ற ஊழியர்களுக்கு எ–யாவாக! எ–சாவாக வை போல ஒரு தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தார்கள்.

இயேசு அழைக்கிறார், காருண்யா ஊழியங்களுக்கு பல கோடிகள் தேவைப்பட்டாலும் பிறர் நலன் கருதி தசம பாகத்திற்கு மேலாக எடுத்து உபசரிக்கும் இந்த மகனுக்காக தேவனைத் துதிப்போம். மற்றவர்கள் துன்பப்படுத்தி பேசினாலும் இவர் காதில் விழுவதில்லை. எத்தனை துன்பங்கள் எழுந்தாலும் அவைகளை காண்பதில்லை இயேசுவின் அன்பும், மனதுருக்கம் தான் தெரியும். தன்னை பகைத்தவர்கள் ஜெபத்திற்காக வந்துவிட்டால் பிள்ளை மனம்போல் பகிர்ந்து கொடுக்கும் உள்ளமல்லவா? **அன்பு தினகரன் ஐயா அவர்கள் ஆயிரமல்ல, இலட்சமல்ல, கோடிகளில் ஒருவர். தேவன் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல உலகத்திற்கு தந்த பெரிய ஈவாகும்.**

## தினகரன் ஐயா ஒரு தீர்க்கதரிசி

1992 ம் வருடத்தி–ருந்து ஷாலோம் ஊழிய ஆரம்ப காலத்தில் இருந்து அன்பு தினகரன் ஐயா அவர்கள் ஜெபித்து கூறின தீர்க்க தரிசனங்கள் ஒவ்வொன்றும் அப்படியே நிறைவேறிக் கொண்டே வருகிறது. எத்தனையோ காரியங்களை கூறி கொண்டே போகலாம்.

நாங்கள் மிஷனெரி ஊழியம் ஆரம்பித்த நேரத்தில், சுவிஷேசத்தை மட்டும் கூறி பீல் மக்களை சந்திக்க வேண்டும் என்று நினைத்தோம். பின்பு ஊழியத்தில் அற்புதங்கள் அடையாளங்கள் பெருகவே, நாம் நல்ல பெரிய கூட்டங்களை நடத்தி அற்புத அடையாள ஊழியங்கள் இந்த பீல் மக்கள் மத்தியில் செய்ய வேண்டும் என்று பலவாறு

நினைத்த போது தினகரன் ஐயாவுக்கு கடிதம் எழுதினோம். இந்த காரியத்திற்காக கர்த்தரிடம் உபவாசத்தோடு காத்திருந்து அதிகநேரம் ஜெபித்து, பின்பு பதில் எழுதினார்கள். நீதான் சுவிஷேச ஊழியமும் செய்ய வேண்டும் சபைகளையும் நிறுவ வேண்டும். மிஷனெரி பணியையும், சபை ஊழியத்தையும் தேவன் உனக்கு கொடுத்திருக்கிறார் என்று தெளிவாக பரிசுத்த ஆவியானவர் பேசினார். அந்தபடியே இன்று பீல் மக்கள் மத்தியில் ஊழியம் நிறைவேறி கொண்டே வருகிறது. இப்படி எத்தனையோ முறை சரியான ஆலோசனையை கர்த்தரிடம் இருந்து பெற்று கூறுவார்கள்.

ஒவ்வொரு வருடமும் எங்கள் பிறந்த நாட்கள் திருமணநாட்கள் புதுவருடங்களில் எங்களுக்காக தொலைபேசியில் ஜெபிப்பார்கள். 2007ம் வருடம் ஜீலை 8 எங்கள் திருமண நாளன்று ஜெபித்த போது, சபைகளை பற்றி தீர்க்கதரிசனம் உடைத்தார்கள். *சபை பல மடங்காய் பெருகும், சபைகள் ஸ்திர சபைகளாய் மாறும், சபை மிகுந்த செல்வாக்கு பெற்ற சபையாய் மாறும். பீல் திருச்சபை மக்களே உங்களுக்கு அதிகமாய் உதவுவார்கள்* என்று சபை வளர்ச்சியை பற்றி மகிவும் தெளிவாய் கூறினார்கள். அந்த நாளி—ருந்து சபைகளில் ஒரு பெரிய வளர்ச்சியை பார்க்கிறோம். ஸ்திர சபைகளாய் மாறுகிறதை பார்க்கிறோம். ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் அப்படியே நிறை வேறி வருகிறதைக் கண்டு தேவனைத் துதிக்கிறோம்.

## அன்பு தினகரன் ஐயாவுக்காக ஜெபித்த ஜெயங்கள்

2006 ம் ஆண்டு ஜனவரி மாதத்தி—ருந்து ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி நமது தகப்பனார் தினகரன் ஐயாவுக்காக விஷேசித்த உபவாச ஜெபம் செய்யும்படியாக பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துத—ன் படி சுமார் 50 பெண்களாக (சுதேச ஊழயர்கள் மனைவிமார்கள்) கூடி தாகோத்தில் ஜெபித்து வந்தோம். குறிப்பாக அவர்கள் கால்களில் உள்ள பெலவீனம் நீங்கி எழும்பி நடக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் கண்ணீருடன் ஜெபித்து வந்தோம். இப்படி நாங்கள் ஜெபிப்பது அப்பாவுக்கு தெரிந்தபடியினால் ஒவ்வொரு மாதம் 1ம் தேதிக்கு முன்பே தொலைபேசியில் எங்களோடு கூட பேசி ஜெபக்குறிப்புகளை கொடுப்பார்கள். 1ம் தேதி ஜெபத்திற்கு பின்பும் கூட அநேக முறை தொலைபேசியில் பேசி கர்த்தர் கொடுத்து வருகிற நல்ல சுகம் கால்களில் பெலன் இவற்றை பகிர்ந்து கொள்வார்கள். 6 மாதங்கள் கழித்து என்னுடைய கால்களில் 50 சதவீதம் பெலன் கிடைத்து விட்டது என்றும் சரீரத்திலே முன்பு இருந்த பெலவீனங்கள் நீங்கி நல்ல பெலன் கிடைத்துள்ளது என்றும் மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

பின்பு 2007 அக்டோபர் மாதம் இவ்வாறு கூறினார்கள் *என்னுடைய கால்களில் நல்ல பெலன் கிடைத்துள்ளது. நான் நன்றாக நின்று பிரசங்கம் செய்யும் அளவிற்கு பெலன் கிடைத்து விட்டது. இவ்வளவாக எனக்காக ஜெபித்து என்னை எழுப்பி விட்டீர்கள். இன்னும் தொடர்ந்து ஜெபியுங்கள் விரைவில் நடந்து விடுவேன்* என்று கூறினார்கள். அதன் பின்பு 2008 ஜனவரி மாதம் தொலைபேசியில் பேசும்போது என்கால்களில் கிடைத்த பெலன்தான் 2007ல் கர்த்தர் எனக்கு செய்த பெரிய அற்புதம் என்று சொல்– மிகவும் சந்தோஷமாய் கூறி சத்தமாய் சிரித்தார்கள். அந்த சிரிப்பின் தொனி இன்றும் எங்கள் காதுகளில் ஒ–த்துக் கொண்டே இருக்கிறது.

எப்படியாகிலும் கர்த்தர் கடைசி நாட்களில் அவர்கள் இருதயத்தின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணமாக கால்களில் பெலன் கொடுத்து நிற்க செய்தார். அவர்கள் எதையும் பிடிக்காமல் நன்றாக நின்று செய்தி கொடுத்த சீ. டி. யையும் உடனே எங்களுக்கு அனுப்பி தந்தார்கள். நாங்களும் அதை கண்டு, தேவன் நம் ஜெபத்திற்கு பதிலை கொடுத்தார் என்று மிகுந்த சந்தோஷத்துடன் ஆண்டவருக்கு நன்றி கூறினோம்.

பின்பு ஜனவரி மாதம் மிகவும் சரீர பெலவீனம் அடைந்த நேரத்திலும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து கொண்டே இருந்தோம். பெண்களாக சேர்ந்து சங்கி– தொடர் உபவாச ஜெபம் செய்தோம். ஆனாலும் கர்த்தருடைய வேளையை யாராலும் தடுக்க முடியாது என்றபடி தேவன் தமது சித்தத்தின்படி அவருடைய வேளையில் எடுத்துக் கொண்டார். பெப்ரவரி 20 ம் தேதி அன்று அதிகாலையில் மத்திய பிரதேசத்தில் உள்ள ஒரு சுதேச ஊழியர் மனைவி **சகோதரி. பாகுடி தி–ப் சிங்** என்ற சகோதரிக்கு கர்த்தர் காட்டி **இந்த இயேசு அழைக்கிறார் காலண்டரில் உள்ள உங்கள் அங்கிள் இப்போழுது என்னிடத்தில் இருக்கிறார்கள்** என்று கூறினார். அவர்கள் வந்து மார்ச் 1ம் தேதி கூட்டத்தில் சாட்சி கூறினார்.

எங்களை அதிகமான நேசித்த **D.G.S. தினகரன் ஐயா** அவர்களை தேவன் தம்முடைய இராஜ்யத்திற்குள் எடுத்துக் கொண்டதை நினைக்கும்போது இன்றைக்கும் எங்கள் கண்களில் கண்ணீர் வருகிறது. ஆனாலும் தேவன் எங்களை பெலப்படுத்தி வருகிறார். நாங்களும் அனைத்து பீல் சுதேச ஊழியர்களும், பீல் விசுவாசிகளும் D.G.S. தினகரன் ஐயா விட்டுச் சென்ற இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காகவும், அம்மாவுக்காகவும், Dr. பால் தினகரன் குடும்பத்திற்காகவும் அதிகமாக ஜெபிக்கின்றோம்.

**– தேவதாஸ் மற்றும் வஹிதா தேவதாஸ்**

# 70 பீல் மூத்த சுதேச ஊழியர்களுக்கான போதகர் பயிற்சி முகாமில் Dr. பால் தினகரன்.... (ஏப்ரல் 7-12)




Dr. பால் தினகரன் அவர்களுக்கு வரவேற்பு




செய்திவேளையின் போது Dr. பால் தினகரன் அவர்கள்




ஆர்வத்துடன் வசனத்தைக் கேட்கும் 70 சுதேச ஊழியர்களின் குடும்பம்




# Dr. D.G.S. தினகரன் அவர்களுடன் சகோ. வே. தேவதாஸ் அவர்கள் குடும்பம்



1992ல் வல்லமை முகாம்



ஊழியத்திற்காக ஜெபம்






அன்பு தாத்தாவுடன் டைட்டஸ்



1998ல் இயேசு அழைக்கிறார் அலுவலகத்தில்



அன்பு மகள் வஹிதாவுடன்






அன்பு தாத்தாவுடன் ஷாலோம்



2005ல் காருண்யாவில்



அன்பு தகப்பனுக்காக ஜெபம்





அன்பு தாத்தாவுடன் குட்டிநாய் என்ற செல்லமாக அழைக்கப்பட்ட ஷெக்கினா



தினகரன் ஐயா அவர்களின்
அடக்க ஆராதனையின்போது



தூத்துக்குடியில் தேவன் தந்த வீடு





இயேசு அழைக்கிறார் நிதி உதவி மூலமாக வாங்கப்பட்ட
குஜராத், ஜாலோத், தாஹோத் அலுவலக கட்டிடம்

# 70 பீல் மூத்த சுதேச ஊழியர்களுக்கான போதகர் பயிற்சி முகாம் (ஏப்ரல் 7–12)



Pr. ஜோயல் அனந்தராஜ் அவர்கள்






Pr. ஞானசேகரன் அவர்கள்



Pr. டப்ல தங்கையா அவர்கள்



Sis. ஃபீபி அனந்தராஜ் அவர்கள்







## 70 பீல் சுதேச ஊழியர்களுக்கு போதகர் பயிற்சி முகாம்

(07-04-2008 முதல் 12-04-2008)

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியும், தேவ கிருபையினாலும், அதிக நாட்கள் காத்திருந்து ஜெபித்து, ஆவியானவரின் வழி நடத்துத–ன்படி, நமது 405 பீல் சுதேச ஊழியர்களின் 70 பேர்களை அதிக ஜெபத்துடன் தெரிந்தெடுத்து அவர்களுக்கு போதகர் பயிற்சி கொடுத்து போதர்களாக அபிஷேகம் (பிரதிஷ்டை) செய்ய தீர்மானித்தோம்.

அதற்காக வேதத்தின் அடிப்படையிலும் அரசாங்க சட்டப்படியாகவும் சபையின் ஒழுங்குகள் மற்றும் அடிப்படை உபதேசங்கள், சட்டதிட்டங்கள் சபை மக்களுக்கு மாதிரியான காரியங்கள் இவைகளை பற்றி கற்றுக் கொடுத்தோம். இவர்களில் ஒரு சிலரைத் தவிர அனைவரும் B.Th., (Hindi Medium) Allahabad Bible Seminary மூலமாக Correspondence Course –ல் படித்து வருகிறார்கள்.

இந்த தெரிந்தெடுக்கப்பட்ட 70 போதகர்கள் குடும்பங்களுக்காக 6 நாட்கள் சிறப்பு பயிற்சி கொடுக்கும்படியாக ஆனந்த் பட்டணத்தில் உள்ள "பெரக்கா கூடுகை மையத்தில்" முகாம் ஒழுங்கு செய்தோம். ஆரம்ப ஆயத்த ஆராதனை மற்றும் ஜெபத்திற்கு பின்பு சகோ. தேவதாஸ் அவர்கள் தேவன் அவர்களுக்கு கொடுத்து பரம தரிசனத்தை பகிர்ந்து பீல் மக்களை (ஆடுகளை) குறித்த தரிசனத்தில் சபை மற்றும் மேய்ப்பனுடைய அழைப்பையும் குறித்து பேசி அர்ப்பணிக்க வைத்தார்கள்.

எங்கள் ஆவிக்குரிய தகப்பனும் மூத்த போதகருமான Pr. Joel Anatharaj (Apostalic Church-CBE) அவர்களும், அவர்கள் துணைவியார் சகோதரி Bhebi Joel Anatharaj அவர்களும் குடும்பமாக வந்து சிறப்பு பயிற்சி கொடுத்தாரக்ள். Pr. Joel அவர்கள் ஒவ்வொரு போதகர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படை வேத சத்தியங்கள், ஞானஸ்நானம், திருவிருந்து, பரிசுத்த ஆவியானவர், வரங்கள், காத்திருப்பு கூட்டங்கள், உபவாச ஜெபங்கள் மற்றும் மேய்ப்பன், ஆடுகள், சபைகள், வீடு சந்திப்பு இவைகளைக் குறித்து வேத அறிவை மட்டுமல்ல தங்கள் அனுபவத்தி–ருந்து சபைகள் பராமரிப்பதை பற்றியும், குறிப்பாக பாவம், சாபம், நோய்கள், பிசாசின் கட்டுகளி–ருந்தும் விசுவாசிகளை விடுவிப்பது பற்றியும்,

காலை மாலை அயராது கற்றுக் கொடுத்து அவர்களை அர்ப்பணிக்கவும் அபிஷேகத்திலும் வழி நடத்தினார்கள்.

சகோதரி Phebi Joel அம்மா அவர்கள் கிறிஸ்தவ குடும்பம் மற்றும் மேய்ப்பனின் குடும்பம் எப்படியிருக்க வேண்டும்? என்றும் ஒவ்வொரு குடும்பங்களையும், ஒவ்வொரு ஆத்துமாக்களையும் இரட்சிப்புக்குள் இறுதிவரை நடத்தி செல்லும்படியாக பொறுப்புகள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்து எடுத்துரைத்தார்கள். மட்டுமல்லாமல் தங்கள் அனுபவ சாட்சிகளையும், ஒரு பெண் எவ்வாறு சாந்தமாகவும் நீடிய பொறுமையாகவும் இருக்க வேண்டும் என்று வேதாகமத்தில் பெண்கள் மற்றும் ஆண்கள் என்றும் மிகவும் சிறப்பாய் பேசினார்கள்.

Pr. Gnanasekaran (ஜீவ வார்த்தை சபை, சென்னை) அவர்களும் 5 நாட்கள் போதகர்களுக்காக சிறப்பு பயிற்சியை கொடுத்தார்கள். **1. மேய்ப்பனுடைய குடும்ப வாழ்வு. 2. பரிசுத்தமான வாழ்வு. 3. சபையில் ஆவியானவருடைய ஆளுகை. 4. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல். 5. உண்மையுள்ள மேய்ப்பர்கள். 6. பொறுப்புள்ள மேய்ப்பர்கள்** என்பதைக் குறித்தும் மேலும் அநேக காரியங்களை அனுபவத்தி–ருந்தும், வேதத்தி–ருந்தும் மிகவும் சிறப்பாய் கற்றுக் கொடுத்தார்கள்.

11.04.2008 அன்று மதுரையி–ருந்து New Life Assembly மூத்த போதகர் Rev. Dudley Thangaiah அவர்கள் வந்து மாலையில் சந்தியா எடுத்தார்கள். அதில் **"சோர்வுகளை நீக்கி பெலப்படுத்தும் ஆவியானவர்"** என்ற தலைப்பில் இளம் போதகர்களை உற்சாகப்படுத்தி பேசினபொழுது பரிசுத்த ஆவியானவர் மிகவும் பலமாய் எல்லோர் மேலும் இறங்கினார். அனைவரும் மறந்த தரிசனத்தையும் பெற்றார்கள். தேவன் வல்லமையாய் கிரியை செய்தார்.

12.04.2008 அன்று காலை ஆனந்த் பட்டிணத்தி–ருந்து அகமதாபாத் பட்டிணத்திற்கு புறப்பட்டுச் சென்று அங்குள்ள 'Medifal Association Hall' –ல் நமது 70 போதகர் குடும்பங்களுக்கும் மிக நேர்த்தியாக கூட்டம் ஒழுங்க செய்யப்பட்டது. போதகர்கள் யாவரும் வெள்ளை சீருடையில் அமர்ந்திந்தாரக்ள். நமது அன்புக்குரிய சகோதரர் **Dr. பால் தினகரன்** அவர்கள் அகமதாபாத்

**“இயேசு அழைக்கிறார்”** ஜெப கோபுரத்தை திறந்து வைக்க 12.04.2008 அன்று வருகை தந்தார்கள். அந்த வேளையில் நமது அன்பு வேண்டுகோளுக்கு இணங்கி Airport –ருந்து நேராக நம் ஊழியர்கள் கூடியிருந்த Hall–க்கு வருகை தந்தார்கள். அவர்களுக்கு சிறப்பு வரவேற்பு ஊழியத்தின் சார்பில் வழங்கப்பட்டது. ஆராதனை வேளையில் ஆவியானவருடைய அருள்மாரி பிரசன்னம் அபரிமிதமாக இறங்கி வந்தது. Dr. பால் தினகரன் அவர்கள் யோவான் 15:16 வசனத்தின்படி **1. நான் உங்களை தெரிந்து கொண்டேன். 2. கனிகள் தரும்படியாக தெரிந்து கொண்டேன். 3. கனிகள் நிலைத்திருக்கும்படியாக தெரிந்து கொண்டேன். 4. நீங்கள் என் நாமத்தில் எதைக் கேட்டாலும் பிதாவானவர் தருவார்** என்றும் வசனங்களைப் போதித்தார்கள். தேவ வல்லமை மிகவும் பலமாய் இறங்கினது. கூடியிருந்த யாவரும் மிகவும் வல்லமையினால் நிரப்பப்பட்டார்கள். ஊழியர்கள் யாவரும் புதிய கிருபைகளையும், புதிய தரிசனத்தையும் புதிய அபிஷேகத்தையும் பெற்றார்கள். மட்டுமல்லாமல் அநேகருடைய வியாதிகள், வேதனைகள் ஆவியானவர் வெளிப்படுத்தி விடுதலைகளையும் கட்டளையிட்டார். மேலும் ஒவ்வொருவர் ஆசீர்வாதத்திற்காக மன்றாடி ஜெபித்தபோது பரலோக ஆசீர்வாதங்கள் இறங்கி வந்தது. இறுதியில் போதகர் 70 குடும்பங்கள் மீதும் கைகளை வைத்து ஜெபித்து ஆசீர்வதித்தார்கள்.

இந்த சிறப்பு கூட்டத்தில் “Jesus Calls” Administrator Mr. Eric Sunderraj அவர்களும் மதிப்பிற்குரிய அன்பு சகோதரர் Mr. ஜெகதீஸ் பாண்டியன் I.A.S. (காந்திநகர்) அவர்களும் குடும்பமாக வருகை தந்தது மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது.

கூட்டத்தின் 6 நாட்களும் அனைவரும் மனமார தேவனை ஆராதித்தார்கள். மாலை வேளையில் நடனமாடி துதித்து ஆவியில் களிகூர்ந்தார்கள். 3 மாநிலங்களி–ருந்தும் சிறப்பு ஆதிவாசி பாடல்களைப் பாடி பரவசமடைந்தார்கள். பீல் மக்களின் இரட்சிப்புக்கென்று சிறப்பு விண்ணப்பங்களும் ஏறெடுக்கப்பட்டது.

*“நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகுவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்கு செய்ய வல்லவராய் இருக்கிறார்” எபேசியர் 3:20* ஆமென்.

## கிறிஸ்துவுக்குள் அன்பான மதுரை ஆதரவாளர்களுக்கு...

நீங்கள் பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியத்தை நேசித்து, ஜெபித்து தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டும் பணியில் எங்களோடு இணைந்து காணிக்கையின் மூலமாக மிஷனெரி பணியை தாங்கி வருகிறதற்காக உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மதுரையில் ***சகோ. பிரபாகரன்*** அவர்கள் ***முன்னேற்றப் பணியின் செயலாளராக*** செயல்பட்டு வந்தார்கள். தற்பொழுது அவர்களுடை மனைவி சுகவீனமாக இருக்கிறார்கள். ஆகவே சகோ. பிரபாகரன் அவர்கள் அவர்களுடைய மனைவி இருக்கும் இடத்திற்கு (வெளிநாட்டிற்கு) சென்று அவர்களுக்கு உதவியாக இருந்து வேலை செய்ய உள்ளார்கள். இந்த காரணத்தினால் மார்ச் 1ம் தேதி முதல் ஷாலோம் ஊழியத்தி–ருந்து விலகியுள்ளார்கள் என்பதை உங்களுக்கு தெரியப்படுத்துகிறோம். மதுரைப் பகுதியில் புதிதாக முன்னேற்றப் பணியாளர் சீக்கிரமாக கிடைக்க ஜெபியுங்கள். நாங்களும் அதற்காக ஜெபித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே மாதந்தோறும் நீங்கள் கொடுக்கிற மிஷனெரி காணிக்கையை தயவு செய்து ***தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு M.O. (or) D.D. (or) Cheque*** மூலமாக அனுப்ப உங்களை அன்பாய் கேட்கிறோம். தயவு செய்து பீல் மக்கள் ஆசீர்வாதங்களுக்காக சில மணித்துளி நேரத்தை செலவு செய்து காணிக்கைகளை அனுப்பி உதவ அன்பாய், தாழ்மையாய் கேட்கிறோம். அல்லது மதுரையில் முழு நேர ஊழியர் கிடைக்கும்வரை நம் ஊழியத்தை அதிகமாக நேசித்து தாங்கிவரும் மதுரை திருநகரில் உள்ள திருமதி. ***ரூபி பிரபாவதி*** அவர்களிடம் காணிக்கைகளைக் கொடுத்து இரசீதை பெற்றுக் கொள்ளலாம்.



**சகோதரரி. ரூபி பிரபாவதி அவர்களை தொடர்பு கொள்ள**
**செல் : 99407–53581**



# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையை செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர்

**Sharing Love Mission**

| | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADOSS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

## பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. குமன்பாய் டாமோர் கரம்பா (குஜராத்)**

காளுபாய் என்ற சகோதரருக்கு 2ஆண் பிள்ளைகள்,3பெண் பிள்ளைகள். இந்த 5 பிள்ளைகளின் கால்களும் நடக்கமுடியாமல் முடமாயிருந்தது. மருத்துவமனைக்குச் சென்றும், மந்திரவாதியிடம் சென்று பணம் செலவழித்தும் பலன்கிடைக்கவில்லை. நான் வசனத்தைப் படித்து வாக்குத்தத்தத்தை சொல்– ஜெபித்தேன். தேவன் 5 பிள்ளைகளுக்கும் சுகம் கொடுத்து நடக்கும்படி செய்துள்ளார்.

**சகோ. மத்தூரர் ரட்டுவா சன்னாடா (குஜராத்)**

சமாரியாபாய் என்ற சகோதரருக்கு பைத்தியம் பிடித்து வீட்டில் உள்ள நபர்களை கூட அடையாளம் கண்டு கொள்ள முடியாத நிலையில் இருந்தார். இவரை மந்திரவாதியிடம் அழைத்து சென்றும் எந்தவித பலனுமில்லை. இறுதியாக மரிக்கும் தருவாய்க்குச் சென்றுவிட்டார். இரவில் இவரை ஆலயத்திற்கு கொண்டு வந்தார்கள். நான் இந்த சகோதரருக்காக ஜெபித்த போது பைத்தியத்தி–ருந்து தேவன் விடுதலை கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ. கேசவ்பாய் பார்மர் நெல்சூர் (குஜராத்)**

அஸ்ஹிஸ் என்ற 5 வயது சிறுவனுக்கு இரத்த பேதி ஏற்பட்டு மிகவும் சோர்ந்து போய்விட்டான். விசுவாசிகள் அனைவரும் கூடி அவனுக்காக பாரத்தோடு ஜெபித்தோம். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு மகனுக்கு அற்புத சுகத்தை தந்தார். தேவனுக்கே நன்றி.

**சகோ. சாம்சன் டாமோர் வாங்கோல் (குஜராத்)**

பிப்பளியா என்ற கிராமத்தைச் சேர்ந்த நாஜிபேன் சங்காடா என்ற சகோதரி பல ஆண்டுகளாக நடக்க முடியாமல் பெலவீனமாக இருந்தாள். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. எனவே இந்த சகோதரியின் அண்ணன் மகன் ஆலயத்திற்கு அழைத்து வந்தான். நாங்கள் சபையில் இந்த சகோதரிக்காக விசுவாசத்தோடு ஜெபித்தபோது ஆண்டவர் அற்புதமாக சுகம் கொடுத்தார்.இப்பொழுதுஇந்தசகோதரிநடக்கதேவன்பெலன் கொடுத்திருக்கிறார்.

**சகோ. பாதர் டோடியார் பேடவ்நாத் (இராஜஸ்தான்)**

பேடவ்நாத் கிராமத்தைச் சேர்ந்த நிறை மாத கர்ப்பிணி சகோதரிக்கு வயிறுவ– ஏற்பட்டபோது டாக்டர்கள் பரிசோதித்து குழந்தை இறந்துவிட்டது எனக் கூறினார்கள். வ– ஏற்பட்ட 1 மணி நேரத்தில் குழந்தை இறந்து பிறந்தது. நானும் மூப்பர்களும் கூடி அந்த குழந்தைக்காக விசுவாசத்தோடு ஜெபித்தபோது 3 மணி நேரத்திற்கு பின் அந்த குழந்தை உயிர் பெற்றது. இன்றும் குழந்தை உயிரோடிருக்கிறது. உயிர் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**சகோ. ஜித்தேந்திரகுமார் காத் உமேத்காடி (இராஜஸ்தான்)**
சாந்திபேன் என்ற சகோதரிக்கு ஒரு காலும், ஒரு கையும் செயல்படாமல் போய்விட்டது. இந்த சகோதரிக்காக நான் எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக்கொடுத்தார்.

**சகோ. காளுசிங் கராசியா ராவ்தாசாத் (இராஜஸ்தான்)**
தான்குபேன் என்ற சிறுமி 3 வருடமாக போ–யோவினால் பாதிக்கப்பட்டு நடக்கமுடியாமல் இருந்தாள். மருத்துவமனையில் ரூ.3000 செலவழித்தும் பலன் கிடைக்கவில்லை. இந்த சிறுமியை தொடர்ந்து ஆலயத்திற்கு அழைத்துவந்து ஜெபித்தபோது தேவன் சுகத்தைக் கொடுத்து நடக்க கிருபை செய்தார்.

**சகோ. மோகன் P. காத் புச்சியாவாடா (இராஜஸ்தான்)**
ராமுடிபேன் என்ற சகோதரி பிசாசு பிடித்து நோயினால் மிகவும் கஷ்டப்பட்டாள். அவள் குடும்பத்தார் மருத்துவமனைக்கும், மந்திரவாதியிடமும் சென்றும் பலன் கிடைக்கவில்லை.இறுதியாக கட்டி–ல் படுத்த நிலையில் 4 பேர் சேர்ந்து தூக்கிக்கொண்டு வந்தார்கள்.நான் அவளுக்காக விசுவாசத்தோடு ஜெபித்தபோது பிசாசு அவளைவிட்டு விலகியது. அந்த சகோதரி நடந்தே வீட்டிற்குச் சென்றாள்.

**சகோ. சோம்லாபுரியா ரூண்கேடா (மத்தியபிரதேசம்)**
ரேவ்–பேன் என்ற சகோதரிக்கு கழுத்தில் கட்டி ஏற்பட்டு மிகவும் வேதனைப்படுத்தியது. அதற்காக நாங்கள் ஜெபித்தபோது தேவன் கட்டி மறையும் படி செய்தார். தேவனுக்கே நன்றி.

**சகோ. பால் முனியா குட்டாயா (மத்தியபிரதேசம்)**
மணிபேன் என்ற 20 வயது சகோதரிக்கு 6 மாதமாக இரத்தப்போக்கு ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டு வந்தாள். அந்த சகோதரியை சபைக்கு அழைத்து வந்து என்னிடம் ஜெபிக்கச் சொன்னார்கள். நான் விசுவாசத்தோடு அவளுக்காக ஜெபித்தபோது தேவன் பாடுகளி–ருந்து விடுதலையாக்கி அற்புத சுகத்தைக்கொடுத்தார்.

**சகோ. யாகூப் சங்காடா அமர்பூரா (மத்தியபிரதேசம்)**
அமர்பூரா கிராமத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை 2 வருடமாக நடக்க முடியாமல் இருந்தது. நாங்கள் விசுவாசத்தோடு ஜெபித்த போது குழந்தை நடக்கும்படி தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே நன்றி.

**சகோ. கோவிந் மெய்டா தேவ்கா (மத்தியபிரதேசம்)**
மானா ஹிமா சாரேல் என்ற சிறுவன் 7 வருடங்களாக பேசமுடியாமல் இருந்தான். இவனுக்காக நாங்கள் விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் நன்றாக பேசும்படி கிருபை செய்தார்.

# ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர்களை பராமரிக்க முன் வரலாம்.
- ரூ.50,000/-கொடுத்து தேவையுள்ள இடத்தில் கிராம ஆலயம் கட்டுவதற்கு முன் வரலாம்.
- மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  தேவைப்படுகிறது.
- ஊழியத்திற்கு செல்ல ரூ.2,000/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** 48 சுதேச ஊழியர்களுக்கு தேவைப்படுகிறது.
- பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினை பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ரூ.70/-வீதம் குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

## கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான ஷாலோம் பங்காளர்களுக்கு



இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கடிதம் மூலமாக தொடர்புகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊழியர்கள், மூப்பர்கள், பெண்கள், விசுவாசிகள் இவர்களுக்கு சிறப்பாக கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள். ஆனால் சுமார் 20,000 சிறுவர்கள் மத்தியில் ஊழியங்களை ஸ்திரப்படுத்த தேவன் இந்நாட்களில் பாரம் தந்து வருகிறார். இந்த ஆண்டு 250 பேர்களுக்கு ஞாயிறு வகுப்பு ஆசிரியர் பயிற்சி புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு நேர்த்தியாக 250 கிராம சபைகளில் நடைபெற்று வருகிறது.

இப்பவும் V.B.S. 10 நாட்கள் ஆதிவாசி சிறுவர்களுக்காக ஒவ்வொரு வருடமும் மற்ற ஸ்தாபனங்களி–ருந்து வாங்கி பயன்படுத்தி வந்தோம். ஆனால் அந்த Materials மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதால் ஆதிவாசி சிறுவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. மிகுந்த ஜெபத்துடன், ஆவியானவரின் நடத்துத–ன்படி நானும் நம்முடைய வேதாகம பயிற்சி குழுவினருடன் (சகோ. அணில் சௌகான், சகோ. பாவ்சிங், சகோ. ஜெய்னுசிங், சகோ. விகாஷ்) இணைந்து நேர்த்தியாக **இயேசு என் இரட்சகர்** என்ற தலைப்பில் (பிகினர், பிரைமரி, ஜீனியர், இன்டர்) புத்தகங்கள் தயாரித்து உள்ளோம். இவைகளை நம் ஷாலோம் CBC (Children Bible Class) வெளியீடாக அச்சிட வேண்டும். Director, Teacher Guide, Student Work Book, மற்றும் Badge, Certificate தயாரித்து உள்ளோம். இவை அச்சிட்டு ஆயத்தப்படுத்த வேண்டும். மேலும் 400 பேர்களுக்கு பயிற்சியும், 10 நாள் வகுப்பு நடத்த சில உதவிகளும் செய்ய வேண்டும்.இதற்காக தேவை ரூ.3 இலட்சங்களாகும். நம் பீல் மக்கள் சபை மூலமாக ரூ.1 இலட்சம் எழுப்ப தீர்மானித்துள்ளோம்.மீதி **ரூ.2 இலட்சம்** தேவைப்படுகிறது. ஆகவே தாங்கள், புத்தகங்கள் மற்றும் தேவையான பொருட்கள் ஆயத்தமாக்கப்பட நிதி உதவி கிடைக்கப்பெற, பயிற்சி ஆசீர்வாதமாக கொடுக்கப்பட, 10 நாட்கள் CBC வகுப்புகளில் ஆயிரம் ஆயிரம் பீல் ஆதிவாசி சிறுவர்கள் இரட்சிக்கப்படவும் ஆயத்தமாக்குகிற எங்களுக்காகவும் ஜெபியுங்கள். காணிக்கையை **Sharing Love Mission** என்ற பெயருக்கு Cheque or DD மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும்படி அன்புடன் கேட்கிறேன்.

**இயேசு சிறுபிள்ளைகளை அழைத்து அவர்கள் மீது**
**கைகளை வைத்து ஆசீர்வதித்தார்**

பீல் மக்கள் அறுவடைப்பணியில்,
உங்கள் அன்பு சகோதரி,

D. Vahidoss

(D. Vahitha Devadoss)

புதுக்கோட்டை வட்டார மிஷனெரி ஜெபக்குழு

# 2வது மிஷனெரி தரிசன முகாம்

நாள்
**மே 17 - 2008**
**சனிக்கிழமை**

நேரம்
**காலை 9 மணி முதல்**
**2 மணி வரை**

இடம்
**சத்யா மஹால்,**
பைபாஸ் ரோடு, புதுக்கோட்டை (தூத்துக்குடி மாவட்டம்)

தொடர்பு :
**சகோ. நெல்சன் தேவபிச்சை,** செல் : 93677–51219

சிறப்பு செய்தி :
## சகோ. வே. தேவதாஸ்

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை


நாள்
**மே 11 - 2008**
**ஞாயிற்றுக்கிழமை**

நேரம்
**காலை 10 மணி முதல்**
**1 மணி வரை**

இடம்
**அதிசயங்களின் கூடாரம்,**
நெட்டியான்விளை, மாமூட்டுக்கடை.

தொடர்பு :
**Pr. K.N. ராஜன்**
போன் : 04651 – 274304, செல் : 94420 – 77256
**Bro.G. செல்வம்,** செல் : 93447–24395


## உண்டியலைப் பற்றி



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டிய–ல் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டிய–ன் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி (Key) வேண்டுமானால் 9345675468 இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.


## *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2008) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்தரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–  ஆயுள் சந்தா : ரூ.600/–**



# ஜாண் நாக்ஸ்

மிஷனெரி முன்னோடிகள்

ஜாண் நாக்ஸ் ஸ்காட்லாந்து நாட்டில் நடைபெற்ற சமய சீர்திருத்த இயக்கத்தில் தீவிரமாக பங்கு வகித்தவர். இவர் கி.பி. 1514 ஆம் ஆண்டு பிறந்தார். செயின்ட் ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் தனது படிப்பை முடித்தார்.

1536ல் திருச்சபை குருவாக அபிஷேகிக்கப்பட்டார். செயின்ட் ஆண்டரூஸ் திருச்சபை தலைமையின் கீழ் 1543 வரை குருப்பணியாற்றினார். இவர் புராட்டஸ்டன்ட் கொள்கை மீதுபிடிப்பு கொண்டவர். இக்கொள்கையைப் பரப்பி வந்த ஜார்ஜ் விஷார்ட் என்பவருக்கு ஆதரவாக இருந்தார். ஜார்ஜ் விஷார்ட்டுக்கு பின்னர் ஆறாவது எட்வர்டுக்கு சாப்ளினாக இருந்தார்.

இங்கிலாந்தில் ரோமன் கத்தோ–க்க அரசு பொறுப்பேற்றபோது மேரி அரசி புராட்டஸ்டன்ட் ஆதரவாளர்களை வெறுத்து அவர்களை ஒடுக்கினதால் 1553ல் நாடு கடத்தப்பட்டு ஐரோப்பிய கண்டநாடுகளான பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகளுக்குச் சென்றார். அங்கு பியூரிட்டன்களுக்கு ஆதரவாக இருந்தார். அந்த நாட்களில் கிரேக்க மற்றும் எபிரெய மொழிகளைக் கற்று வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணிகளில் ஈடுபட்டார். ஆனாலும் இப்பணியைக் காட்டிலும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சை இவரது உள்ளத்தில் மேலோங்கியது. 1559ல் இறுதியாக ஸ்காட்லாந்து திரும்பினார். ரோமன் கத்தோ–க்க சமயத்தைச் சேர்ந்த அரசி இவரை எதிர்த்தாள். இங்கிலாந்து தேசத் தூதுவரான ராண்டல்ப் இவரைப்பற்றி “இவர் ஒருவரது சத்தம் 500 எக்காளங்களுடைய சத்தத்தைக் காட்டிலும் மனிதனுக்கு ஜீவனைக் கொடுக்கக் கூடியது” என சாட்சி பகிர்கிறார். 1560ல் ஸ்காட்லாந்து சீர்திருத்த இயக்கம் வெற்றி பெற்றது.

ஜாண் நாக்ஸ் சபைகளில் சீர்திருத்தங்களை அமல்படுத்துபதில் கவனம் செலுத்தினார். ஏழைகளுக்கு ஆதரவளித்தல், கடவுளுக்கு முன் அனைவரும் சமம், திருச்சபை மூலம் அனைவருக்கும் கல்வி ஆகியவற்றில் ஆர்வம் காட்டினார். அநேக எதிர்ப்புகளுக்கு மத்தியில் தனது ஆதரவாளர்களுடன் இணைந்து வேத புத்தகத்தின் அடிப்படையில் சபையில் உயிர்மீட்சி பெற பாடுபட்டார். ஸ்காட்லாந்தில் கிறிஸ்தவ சமயம் புத்துயிர் பெறலுத்தருக்கு இணையாக உழைத்தார். அந்த சமய சீர்திருத்தவாதி எடின்பர்க் நகரில் 1572 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் நாள் மரணமடைந்தார்.

ஒகேனேக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று வ-யுறுத்தி கர்நாடாகாவில் கன்னட அமைப்புகள் போராட்டம் நடத்தி வந்தன. இந்தப் போராட்டம் தமிழர்களுக்கு எதிரான வன்முறையாக மாறியது. இதனால் பெங்களூரில் தமிழ்ச்சங்கங்கள் தாக்கப்பட்டன. பஸ்கள் கல்வீசி உடைக்கப்பட்டன. தமிழர்களும் தாக்கப்பட்டார்கள். இந்தச் செயல்களுக்கு தமிழ்நாட்டில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

தமிழகத்தில் மாநகராட்சியின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. தமிழக சட்டசபையில் 16.04.2008 அன்று முதல் தூத்துக்குடி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதாக உள்ளாட்சித்துறை அமைச்சர் ஸ்டா-ன் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நாட்டில் 79 பயணிகளுடன் சிசன்கானி என்ற நகரை நோக்கிப் புறப்பட்ட பயணிகள் விமானம் ஒன்று ஓடுதளத்தி-ருந்து விலகி அருகேயுள்ள வீடுகள் மீது மோதியது. இதில் 21 பேர் ப-யானார்கள். 55 பேர் காயமடைந்தார்கள். ப-யானவர்கள் பயணிகளா? அல்லது வீடுகளில் குடியிருந்தவர்களா? என்பது தெரியவில்லை.

ஆப்கானிஸ்தானில் சாலைப் பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் மற்றும் இன்ஜினியர்கள் டெலராம் என்னுமிடத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே காரில் வெடிகுண்டுடன் வந்த தற்கொலை தீவிரவாதி நடத்திய வெடிகுண்டு தாக்குத-ல் இரண்டு இந்திய என்ஜினியர்கள் ப-யானார்கள். ஐந்து பேர் படுகாயமடைந்தனர்

-நன்றி தினத்தந்தி

## எங்களுடன் தொடர்பு கொள்ள


தலைமை அலுவலகம்

**Sharing Love Mission, 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. Tamil Nadu.**
**Ph: 0461 - 2375468 Cell : 9345675468**

பணித்தள அலுவலகம்

**Bro. V. Devadoss, Founder & General Secretary**
**Shalom, Christian Kamdar Society,Dahod - 389 151, Gujarat**
**Ph. : 02673 - 325468, Cell : 09377445468**

**ரூ.2 இலட்சங்கள்** கிடைக்கப்பெற ஜெபிக்கவும். முடிந்த பங்கினை அனுப்பவும் வேண்டுகிறேன். இதற்கேற்ற பலனை தேவன் உங்களுக்கு தந்தருளுவார்.

இம்மாதம் நம் பிள்ளைகள் யாவரும் பரீட்சை எழுதி முடித்து தேர்வு முடிவுகளுக்காக காத்திருப்பார்கள். கர்த்தர்தாமே நல்ல மதிப்பெண்களை கட்டளையிடுவாராக! மேல்படிப்புகளுக்கான ஆசீர்வாதங்களையும், வேலை வாய்ப்புகளையும், நல்ல எதிர்கால வாழ்க்கையினையும் உங்கள் சந்ததிக்கு கட்டளையிடுவாராக! **"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்" *(ஏசா 54 : 13)***


இம்மாத மலரை நம் அன்பு ஆவிக்குரிய தகப்பனும், தேவன் இந்த தேசத்துக்கு தீர்க்கதரிசியாக, பலகோடி ஆத்துமாக்கள் ஆறுதலையும், தெய்வீக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள தேவனால் பயன்படுத்த **Dr.D.G.S. Dhinakaran (இயேசு அழைக்கிறார்)** அவர்களின் நினைவாக சமர்ப்பணம் செய்கிறோம். நாம் தொடர்ந்து இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காக, காருண்யா பல்கலைகழகத்திற்காகவும் குறிப்பாக ஸ்டெல்லா தினகரன் அம்மா அவர்களுக்காகவும், Dr. பால் தினகரன் அவர்கள் குடும்பத்தை தேவன் வல்லமையாக தொடர்ந்து பயன்படுத்த ஜெபிக்க, ஊழியங்களை தாங்கவும் அன்புடன் வேண்டுகிறேன்.

எங்கள் மூத்த மகன் Titus B.B.A III Year முடிக்கவும், Brighton Shalom காருண்யாவில் B.Tec I Year முடிக்கவும், மகள் Joy Shekinah 10th முடிக்கவும் கர்த்தர் கிருபை தந்துள்ளார். தொடர்ந்து பிள்ளைகளின் மேல்படிப்புக்காக ஜெபிக்க கேட்கிறேன். மே மாதம் 3 பிள்ளைகளும் எங்களுடன் இருக்கிறார்கள். எங்கள் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரவும் தேவனுக்காக பயன்படுத்தப்படவும் ஜெபியுங்கள்.

**"நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும்".**(நீதி10:24)

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ அறுவடைப் பணியில்
உங்கள் அன்பு சகோதரன்,



***(வே. தேவதாஸ்)***

# போர்பானி கிராம ஆலயம்



குஜராத் தாகோத் மாவட்டத்திலுள்ள போர்பானி கிராமம் நகரத்திலருந்து மிகவும் உள்ளடங்கிய, மலைப்பாங்கான பகுதி. இங்குள்ள மக்கள் பாவத்திலும், குடிப்பழக்கத்திலும், திருடுவதிலும், இறந்த ஆவிகளை தெய்வமாக பூஜை செய்வதையும் பழக்கமாக கொண்டிருந்தார்கள். இந்த கிராமம் வாகன வசதிகள் இல்லாத கிராமம் ஆகும். இயேசு கிறிஸ்துவை பற்றி சிறிதும் அறியாமல் வாழ்ந்தவர்கள். இவர்களில் ஒருவர்தான் **சகோ. கல்ஜிபாய் சங்காடா.**

இந்த சகோதரருடைய மனைவி (ரத்திபேன்) பலவருடமாக பிசாசின் போராட்டத்தினால் மிகவும் கஷ்டப்பட்டாள். மந்திரம் மற்றும் மருத்துவம் செய்தும் எந்தவித பயனுமில்லை. ஹிரோலா கிராமத்தில் நடைபெறும் ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு பாவங்களை அறிக்கையிட்டு ஜெபித்தார். ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. அனில் கணவா அவர்களுக்காக ஜெபித்த போது தேவன் அவருடைய மனைவிக்கு பிசாசின் போராட்டத்திருந்து விடுதலை கொடுத்தார். தன் மனைவிக்கு விடுதலை கொடுத்த இயேசுவைப்பற்றி தன்னுடைய கிராமத்தில் அநேகருக்கு சாட்சியாக கூறி, ஆராதனை நடத்துவதற்கு தன்னுடைய வீட்டை திறந்து கொடுத்தார். தற்போது 25 குடும்பங்கள் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டுள்ளனர். தன்னுடைய நிலத்தில் ஆலயம் கட்டுவதற்கு காணிக்கையாக கொடுத்துள்ளார். அந்த இடத்தில் தேவ நாம மகிமைக்காக ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. அவருடைய மகன் **சகோ. கல்சிங் சங்காடா** சபையை நடத்தி வருகிறார். இந்த கிராம ஆலயம் **Mrs. Emi Garden** - Sivakasi அவர்கள் கொடுத்த நிதி உதவியில் கட்டப்பட்டது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN-07/2006-2008. TN/WPP-95/SR/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# மருத்துவமுகாம் மற்றும் சுகாதார பயிற்சி முகாம்

## நாள் மார்ச் 24 – 28






மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது






கலந்து கொண்ட 35 வடதேச ஊழியர்கள்







கலந்து கொண்ட ஊழியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது

Our Website : www.shalommission.in
Our E-mail : info@shalommission.in

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss